**வெகுமதிகள் மற்றும் ஊக்குவிப்புக்கள் நிதியம் - 2013**

வெகுமதிகள் மற்றும் ஊக்குவிப்புக்கள் நிதியத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளபடியான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான வருமான செலவினக் கணக்கு, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளையும் ஏனைய வெளிப்படுத்தல் தகல்வல்களின் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் 2009 இன் 08 ஆம் இலக்க மோட்டார் வாகன (திருத்திய) அதிகாரச்சட்டத்தினால் திருத்தப்பட்ட மோட்டார் வாகன அதிகாரச்சட்டத்தின் (203 ஆம் அத்தியாயத்தின்) 213 இ (5) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மேற்குறித்த நிதிக்கூற்றுக்கள் மீதான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இவ்வறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

**1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். உயர் கணக்காய்வு நிறுவனத்தின் சர்வதேச கணக்காய்வு நியமங்களைப் (ISSAI 1000 – 1810) பின்பற்றி இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றியகணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்திற்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது

**2. நிதிக் கூற்றுக்கள்**

**2.1 அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து வெகுமதிகள் மற்றும் ஊக்குவிப்புக்கள் நிதியத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 கணக்கீட்டுக் கொள்கைகள்**

நிதியத்தின் கணக்குகளைத் தயாரிக்கையிலும் சமர்ப்பிக்கையிலும் பின்பற்றப்பட வேண்டிய கணக்கீட்டுக் கொள்கைகள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்குரிய ரூபா 692,119 மொத்தமான பெறவேண்டிய நிலையான வைப்பு வட்டியும் திறைசேரி உண்டியல் வட்டியும் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டில் உத்தியோகத்தர்களிற்கு ஊக்குவிப்புப் படிகளைச் செலுத்துகையில் அறவிடப்பட்டிருந்த ரூபா 59,538 உழைக்கும் போதே செலுத்தும் வரியினை ஊக்குவிப்புப் படிக் கணக்கிற்கு சீராக்காது நிதியத்தின் செலவினமொன்றாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. இவ்வாறு அறவிடப்பட்டிருந்த தொகைகூட உரிய தொகைக்கு மேலதிகமாக ரூபா 17,424 அறவிடப்பட்டிருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டது.

**2.3 சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுக்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் கோவை | |
| (i) நிதிப்பிரமாணம் 371(2) | உப கட்டுநிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கம் முடிவுற்றவுடன் தீர்க்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு செய்யப்படாது 06 மாதங்கள் கடந்ததன் |

பின்னர் தீர்க்கப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(ii) நிதிப்பிரமாணம் 372

திணைக்களமொன்றின் அல்லது அலுவலகமொன்றின் பொறுப்பிலுள்ள கட்டுநிதியொன்று அல்லது உப கட்டுநிதியொன்று திணைக்களத் தலைவரினால் அல்லது அதற்காக அதிகாரமளிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தரினால் குறைந்தபட்சம் ஒரு மாதத்திற்கு ஒரு முறையேனும் பரீட்சிக்கப்பட வேண்டிய போதிலும், நிதியத்தின் முற்பணங்கள் பதிவேடு அவ்வாறான பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2001 யூலை 10 ஆந் திகதிய 17/2001 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை

சுற்றறிக்கை ஏற்பாடுகளிற்கு முரணாக 60 வயதை அடைந்ததன் பின்னர் ஓய்வுபெற்றுச் சென்றிருந்த உத்தியோகத்தர்களில் ஒருவரை ஒப்பந்த அடிப்படையில் நிதியத்தின் நிதிக் கட்டுப்பாட்டாளராக நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு அப் பெண் உத்தியோகத்தருக்கு மீளாய்வாண்டில் ரூபா 420,000 படியொன்றை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

(இ) 2006 திசெம்பர் 22 ஆந் திகதிய பீஎவ்/423 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கை
3.2(ஆ) ஆம் பந்தி

செலுத்தப்படுவதற்கு உள்ள தொகை மற்றும் ஏனைய பொறுப்புக்கள் தீர்க்கப்பட்டதன் பின்னர் எஞ்சியுள்ள தொகைகள் தாமதிக்காது திரட்டிய நிதியத்திற்கு மாற்றப்பட்டு மேலதிக நிதிகள் வெளிவாரி நிறுவனங்களில் முதலீடு செய்யப்பட்டிருக்கையில் அவை முதிர்ச்சியடைந்ததுடன் திரட்டிய மாற்றப்பட வேண்டிய போதிலும், நிதியத்தின் ரூபா 29,000,000 தொடர்பில் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2011 இன் 04 ஆம் இலக்க மோட்டார் வாகனக் கட்டளை

கட்டளையின் படி, பணிகளிற்காக வருடாந்தம் செலவிடப்பட முடியுமான செலவினங்கள் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அந்த எல்லைகள் மீறப்படாமையால் எஞ்சிய ரூபா 2,316,902 தொகை 04 ஒதுக்கக் கணக்குகளிற்கு மாற்றப்பட்டிருந்தது.

## 2.4 அதிகாரமற்ற கொடுப்பனவுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2006 ஏப்ரல் 25 ஆந் திகதிய 06/2006 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் 06(இ) ஆம் அறிவுறுத்தலின் படி சகல படிகளும் ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளும் தொடர்பில் பொது நிர்வாக அமைச்சின் ஊடாக தேசிய சம்பளங்கள் மற்றும் பதவியணி ஆணைக்குழுவுடன் கலந்துரையாடி அறிவுறுத்தல்கள் வழங்கப்பட வேண்டிய போதிலும், அதன்படி நடவடிக்கை எடுக்கப்படாது உத்தியோகத்தர்களிற்காக ரூபா 95,513,462 மொத்தமான தொகை ஊக்குவிப்பு படியாக செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) திணைக்களத்தில் நேரடியாக பணிகளில் ஈடுபடாத போக்குவரத்து அமைச்சிற்கு இணைப்புச் செய்யப்பட்டிருந்த இரண்டு அபிவிருத்தி உதவி உத்தியோகத்தர்கள் அடங்கலான 04 நபர்களிற்கு மீளாய்வாண்டில் ரூபா 217,176 ஊக்குவிப்புப் படியாக செலுத்தப்பட்டிருந்தது.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி, மீளாய்வாண்டில் நிதியத்தின் செயற்பாட்டு மிகை ரூபா 4,799,765 ஆக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 3,719,592 ஆனமையால் நிதி விளைவுகளில் ரூபா 1,080,173 அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டில் நிலையான வைப்புக்களிற்காக கிடைத்திருந்த ரூபா 1,518,315 வட்டி இம் மிகையில் ஏற்பட்ட அதிகரிப்புக்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

### 3.2 விளைவற்ற வளங்கள்

நிதியத்தின் ரூபா 40 மில்லியனுக்கு மேற்பட்ட தொகையினை திறைசேரியின் மிகைகள் கணக்கில் வைப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது 03 மாதங்களிற்கு மேற்பட்ட காலம் நடைமுறைக் கணக்கொன்றில் விளைவற்று வைத்திருக்கப்பட்டிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மோட்டார் வாகனங்களை தயாரித்தல், உற்பத்தி செய்தல், ஒன்றிணைத்தல், புதிதாக வடிவமைத்தல், மாற்றியமைத்தல், நிலைமாற்றுதல் மற்றும் வடிவமைப்பை மாற்றுதல் போன்ற நடவடிக்கைகளிற்காக மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தின் முன் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டிய போதிலும், அவ்வாறான அங்கீகாரமின்றி மேற்கொள்ளப்படுகின்ற சட்டரீதியற்ற நடவடிக்கைகள் தொடர்பில் தகவல்களை வழங்குவோருக்கு பரிசுத் தொகைகளை வழங்குதல் நிதியத்தை தாபித்ததன் அடிப்படை நோக்கமாக காணப்பட்ட போதிலும், மீளாய்வாண்டில் அவ்வாறான தகவல்களை வழங்கியோருக்கு எவ்விதக் கொடுப்பனவுகளும் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மோட்டார் வாகனங்கள் தொடர்பில் பல்வேறு மோசடி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள ஆட்கள் தொடர்பில் தகவல்களை வழங்கும் ஆட்களை உருவாக்குதலும் அவ்வாறான தகவல்களை வழங்குவதற்கு அவர்களை தூண்டுதலும் இவ்வாறான மோசடி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள நபர்களிற்கு எதிராக நடவடிக்கைகளை எடுப்பதற்கு உத்தியோகத்தர்களை ஆர்வமூட்டுதலும் வெகுமதிகள் நிதியத்தை தாபிப்பதன் மூலம் எதிர்பார்க்கப்பட்டிருந்த செயற்பாடாக இருந்த போதிலும், அவ்வாறு தகவல்களை வழங்குகின்றோரையும் உத்தியோகத்தர்களையும் ஆர்வமூட்டுகின்ற எவ்வித செயற்பாடும் நிதியத்தினால் மேற்கொள்ளப்பட்டமைக்கான எவ்வித தகவல்களும் கணக்காய்விற்கு வெளிப்படுத்தப்படவில்லை.

**4.2 சர்ச்சைக்குரிய கொடுக்கல்வாங்கல்கள்**

நிதியத்திற்கான பெறுவனவுகளிலிருந்து நிர்வாக நடவடிக்கைகளிற்காக 1 சதவீத தொகையை ஒதுக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதிலும், 2011 இன் 4 ஆம் இலக்க மோட்டார் வாகன கட்டளைகளில் 1 சதவீதம் என்பது உறுதியாக குறிப்பிடப்படாதிருந்ததுடன் நிர்வாக செலவினத்திற்காக செலுத்தப்படுவதற்கு உரிய தொகை என குறிப்பிடப்பட்டிருந்தது.

**5. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 செயல்நடவடிக்கைத் திட்டம்**

வெகுமதிகள் மற்றும் ஊக்குவிப்புக்கள் நிதியத்திற்காக செயல்நடவடிக்கைத் திட்டமொன்று திணைக்களத்தால் தயாரிக்கப்பட்டிருகக்வில்லை.

**5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு**

மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் பதவியணியினருக்காக ஊக்குவிப்பு கொடுப்பனவுகளை செலுத்துதல் தொடர்பில் பாதீட்டு மதிப்பீட்டிற்கும் உள்ளபடியான செலவினத்திற்குமிடையே ரூபா 11,981,732 மொத்தமான முரண்பாடுகள் காணப்பட்டன. அதன்படி, பாதீட்டினைத் தயாரித்தல் உரிய பிரகாரம் இடம்பெறாதிருந்ததுடன் பாதீடு பயனுள்ள நிதிக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்திக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**5.3 தீர்வுகாணப்படாதுள்ள கணக்காய்வுப் பந்திகள்**

மோட்டார் வாகனங்கள் சம்பந்தமான பல்வேறு வகையான மோசடிகளில் ஈடுபட்டிருந்த ஆட்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் தொடர்பில் எனது SC/C/DMT/2010/03, SC/C/DMT/2010/04 மற்றும் TH/D/RMV/06 ஆம் இலக்க ஐய வினாக்களின் மூலம் மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்த போதிலும், அது சம்பந்தமாக போதியளவு நடவடிக்கைகள் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு நலிவுகள் அவ்வப்போது மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. கீழே குறிப்பிடப்பட்ட துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) பாதீடு
(ஆ) கணக்கீடு